**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.**

2021ம் வருடம் அக்டோபர் திங்கள் 25ம் நாள் திங்கள்கிழமை

**அ.வ.எண்.398/2017 இல் இ.ம.எண்.1/2019**

கிணத்துக்கடவு தாலூக்கா, மாகாளியம்மன் கோவில் அருகில், நல்லடிபாளையம், கதவு எண்.6/17C, என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.கோவிந்தராசு மகன் சுமார் 66 வயதுள்ள திரு.G.செல்வரசன்.

... மனுதாரர் / 1ம் பிரதிவாதி

/ எதிர் /

1.பொள்ளாச்சி தாலூக்கா, மாப்பிள்ளைகவுண்டன்புதுார் (அஞ்சல்), S.நாகூர், கதவு எண்.8/47, என்கிற விலாசத்தில் வசித்து வரும் இந்து, லேட்.வேலுச்சாமி மகன் சுமார் 56 வயதுள்ள திரு.கண்ணுசாமி.

2.பொள்ளாச்சி தாலூக்கா, மாப்பிள்ளைகவுண்டன்புதுார் (அஞ்சல்), S.நாகூர், கதவு எண்.282/4, என்கிற விலாசத்தில் வசித்து வரும் இந்து, லேட்.பரமசிவம் மனைவி சுமார் 37 வயதுள்ள திருமதி.கருணாம்பிகை.

3.பொள்ளாச்சி தாலூக்கா, மாப்பிள்ளைகவுண்டன்புதுார் (அஞ்சல்), S.நாகூர், கதவு எண்.8/47, என்கிற விலாசத்தில் வசித்து வரும் இந்து, திரு.கண்ணுசாமி மகன் சுமார் 35 வயதுள்ள திரு.விஜயகுமார்.

..... எதிர்மனுதாரர்கள் / வாதிகள்

4.மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்துார்.

5.வட்டாச்சியர், வட்டாச்சியர் அலுவலகம், பொள்ளாச்சி.

... எதிர்மனுதாரர்கள் / 2, 3 பிரதிவாதிகள்

இம்மனுவானது, தாலூக்கா சர்வேயர் உதவியுடன் மனுதாரர் / 1ம் பிரதிவாதி மற்றும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் / வாதிகளின் மனுச்சொத்தினை பார்வையிட்டு, அளவிட்டு அதன் பௌதீக தன்மை குறித்து ஆராய்ந்து அறிக்கை

மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய ஏதுவாக நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து உத்தரவிடக் கோரி உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் 10–ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 19.03.2019

இம்மனுவானது கடந்த 01.09.2021 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர் / 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.செங்குட்டுவன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் / வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள் / 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.R.ஹரிபிரசாத் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் / 1ம் பிரதிவாதி மற்றும் எதிர்மனுதாரர்கள் / வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள் / 2, 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

## <u>இறுதி உத்தரவு</u>

| | |
|---|---|
| 1. | இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் **திரு.A.அபுல்கலாம் ஆசாத், M/s.213/1999** அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். நீதிமன்ற ஆணையர் இரு தரப்பினர்களுக்கும் முறையாக அறிவிப்பு கொடுத்த பின்னர் இரு தரப்பினர்கள் முன்னிலையில் இரு தரப்பு உரிமை மூல ஆவணங்களின் அடிப்படையிலும், வருவாய் ஆவணங்களின் அடிப்படையிலும் மனுச்சொத்தையும், எதிர்மனுதாரர்களின் சொத்தினையும் தகுதி வாய்ந்த தாலுாக்கா நில அளவையர் உதவியுடன் இரு தரப்பிலும் கொடுக்கப்படும் குறிப்புகளை ஏற்றுக்கொண்டு, மனுச்சொத்து மற்றும் எதிர்மனுதாரர்களின் சொத்து அமைப்பு மற்றும் அதன் |

| | |
|---|---|
| | இயற்பியல் தன்மை குறித்து அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடத்தினை எதிர்வரும் 23.12.2021 அன்றோ அல்லது அதற்கு முன்போ தாக்கல் செய்யவேண்டும் என்றும், நீதிமன்ற ஆணையர் ஊதியமான ரூ.10,000/-த்தை மனுதாரர் / 1ம் பிரதிவாதி நேரடியாக நீதிமன்ற ஆணையர் வசம் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. |

**<u>சொத்து விபரம்</u>**

**A – Schedule :**

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார்பதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், சேர்வைகாரன்பாளையம் கிராமம் புலத்தில் பட்டா எண்.35 க்கு கட்டுப்பட்ட க.ச.282/2B நெ. காலை பு.ஹெக்.0.89.00 க்கு பு.ஏ.2.19 உள்ள பூமியும் பின்னும் க.ச.282/4 நெ. காலை பு.ஹெக்.3.63.00 க்கு பு.ஏ.8.96 ஆக காலைகள் இரண்டுக்கும் ஒட்டு மொத்த பு.ஹெக்.4.52.00 க்கு பு.ஏ.11.15 பூமி சகிதம்.

**B – Schedule :**

திருப்பூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், புரவிபாளையம் தாக்கல் சேர்வைகாரன்பாளையம் கிராமம் புலத்தில் க.ச.282 நெ. காலை பு.ஏ.33.65 தற்போது உட்பிரிவுப்படி க.ச.282/4 நெ. காலை புஞ்.ஹெக்.3.63.0 க்கு தீர்வை ரூ.12.20 (ஏக்கர் 8.97) இதில்,

என் மீதி பூமிக்கும் ..... வடக்கு

க.ச.286 நெ. காலைக்கும் ..... தெற்கு

என் மீதி பூமிக்கும் ..... கிழக்கு

க.ச.281 நெ. காலைக்கும் ..... மேற்கு

இதன் மத்தியில் புஞ்.ஹெக். 0.63.0 க்கு (பு.ஏ.1.56) தீர்வை ரூ.2.14 இந்த பூமிகளும், இதிலுள்ள துருஸ்து கிணறு ஒன்றும் இதில் வைக்கப்பட்டிருக்கும் 7.5 HP எலக்ட்ரிக் மோட்டார் பம்பு செட் ஒன்றும், மின் இணைப்பு எண்.523ம்

மேற்படி பூமிகளுக்கு உங்கள் வேறு பூமியிலிருந்து மேற்கே வந்து அதிலிருந்து வடக்கே 20 லிங்ஸ் அகலமுள்ள வண்டிதடத்தில் ஆள், கால்நடை, வண்டி வாகனங்கள் போக வர உள்ள தடபாத்தியமும் சகிதம்.

இந்த செட்டில்மெண்ட் பூமியில் வடகோட்டில் கிழமேலாக எனக்கும் என் வகையராப் பேர்களும் போகவர உரிமை உண்டு.

**C – Schedule :**

முன்பு திருப்பூர் பதிவு மாவட்டம், தற்போது கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், புரவிபாளையம் தாக்கல் 25/2 சேர்வைகாரன்பாளையம் கிராமம் புலத்தில் 98 நெ. பட்டா க.ச.282 நெ. காலையில் ஓர்பாகம் உட்பிரிவுப்படி பட்டா எண்.35, க.ச.282/4 நெ. காலை பு.ஹெக்.3.63.0 க்கு தீர்வை ரூ.12.28 உள்ள பூமியில் ஓர்பாகம் அதாவது,

கீழ்க்கண்ட பு.ஏ.0.50 செண்ட் பூமிக்கும்
க.ச.282/4 ல் என் மீதி பூமிக்கும்
க.ச.282/2A நெ. காலைக்கும், பொது கிணற்றுக்கும் ..... வடக்கு

க.ச.285, 286 க.ச.282/4 ல் கருணாம்பாள்
சொத்துக்கும் ..... தெற்கு

க.ச.282/2A, 282/1A, 282/3 நெ. காலைகளுக்கும்
கீழ்க்கண்ட பு.ஏ.050 செண்ட் பூமிக்கும் ..... கிழக்கு

க.ச.282/4 ல் கருணாம்பாள் சொத்துக்கும்,
க.ச.281 நெ. காலைக்கும், க.ச.282/4 ல்
என் மீதி பூமிக்கும் ..... மேற்கு

இதன் மத்தியில் உள்ள பு.ஏ.0.50 க்கு தீர்வை ரூ.1.69 உள்ள புஞ்சை பூமிகளும்,

பின்னும் 98 நெ. பட்டா க.ச.282 நெ. காலையில் ஓர்பாகம் உட்பிரிவுப்படி க.ச.282/3 நெ. காலையில் உள்ள பு.ஏ.0.09 செண்டில் 1/3 பங்கு பு.ஏ.0.03 பூமியும், மேற்படி பூமியில் உள்ள துருஸ்து கிணறு ஒன்றில் பொதுவில் 1/3 பங்கு பாத்தியமும், அதில் வைக்கப்பட்டிருக்கு 5 HP எலக்ட்ரிக் மோட்டார் பம்பு செட்டில் பொதுவில் 1/3 பங்கு பாத்தியமும், அதன் SC.No.70 ம், அதன் மின்சார

உபகரணங்களும், அதன் காப்புத் தொகை பாத்தியம் ஆகியவைகளில் பொதுவில் 1/3 பங்கு பாத்தியமும், மேற்படி பூமிகளுக்கு 6 நாட்களில் 2 நாட்கள் வீதம் தண்ணீர் பாய்த்துக் கொள்ளும் பாத்தியமும், மேற்படி பூமிகளுக்கு எனக்கு 889/2208 நெ. தடபாத்திய உடன்படிக்கைப் பத்திரப்படி க.ச.281/1A1 நெ. காலையில் உள்ள 20 லிங்ஸ் அகல தடத்தில் நீயும், உன்னுடைய ஆட்கள், கால்நடைகள், சகல வண்டி வாகனாதிகள் வகையரா மாமூலாக போகவர உள்ள தடபாத்தியங்களும் சகிதம்.

ஆக ஒட்டு பு.ஏ.5.91 க்கு பு.ஹெக்.2.39.5

**D – Schedule :**

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், புரவிபாளையம் தாக்கல் சேர்வைகாரன்பாளையம் கிராமம் புலத்தில் 26/1945 நெ. உயில்சாசனப்படி பாத்தியப்பட்ட பூமி தற்போது உட்பிரிவுப்படி பட்டா எண்.883 க.ச.282/2A நெ. காலை பு.ஹெக்.3.65.00 க்கு தீர்வை ரூ.12.24 இதில்,

க.ச.277 நெ. காலைக்கும் .... வடக்கு

க.ச.282/2A நெ. காலையில் ஓர் பாகத்துக்கும் ..... தெற்கு

க.ச.282/1B நெ. காலையில் கீழ்க்கண்ட
பு.ஏ.1.54 க்கும் ..... கிழக்கு

க.ச.282/2B நெ. காலைக்கும் ..... மேற்கு

இதன் மத்தியில் பு.ஏ.3.46 க்கு பு.ஹெக்.1.40.00 தீர்வை ரூ.4.73 இந்த பூமியும்,

பின்னும் மேற்படி பட்டா எண்.883 க.ச.282/1B நெ. காலை பு.ஹெக்.0.87.00 க்கு தீர்வை ரூ.2.94 இதில்,

க.ச.277 நெ. காலைக்கும் ..... வடக்கு

க.ச.282/1B நெ. காலையில் ஓர்பாகத்துக்கும்,
ஷை க.ச.282/1B நெ. காலையில் உள்ள
பு.ஏ.0.07½ பொது தடத்துக்கும் ..... தெற்கு

க.ச.282/1A நெ. காலைக்கும் ..... கிழக்கு

க.ச.282/2A நெ. காலையில் ஷை
பு.ஏ.3.46 பூமிக்கும் .... மேற்கு

இதன் மத்தியில் பு.ஏ.1.54 க்கு பு.ஹெக்.0.62.50 தீர்வை ரூ.2.11 இந்த பூமியும், பின்னும் மேற்படி பட்டா எண்.883 க.ச.282/1B நெ. காலை பு.ஹெக்.0.87.00 க்கு தீர்வை ரூ.2.94 இதில்,

க.ச.282/1B நெ. காலையில் ஓர்பாகமான
ஷை பு.ஏ.1.54 பூமிக்கும் .... வடக்கு

க.ச.282/1B நெ. காலையில் உள்ள
பு.ஏ.0.07½ பொது தடத்துக்கும் ..... தெற்கு

க.ச.282/1A நெ. காலைக்கும் ..... கிழக்கு

க.ச.282/1B நெ. காலையில் பு.ஏ.0.51 பூமிக்கும் ..... மேற்கு

இதன் மத்தியில் பு.ஏ.0.02 1/2 க்கு பு.ஹெக்.0.01.00 தீர்வை ரூ.0.06 இந்த தட பூமியும், ஆக மொத்தம் பு.ஏ.5.02½ க்கு பு.ஹெக்.2.03.50 க்கு தீர்வை ரூ.6.90 இந்த பூமிகளும், மேற்படி பூமிகளுக்கு 1531/2003, 3301/2003 நெ. தடபாத்திய உடன்படிக்கை பத்திரத்தில் கண்டுள்ளபடி க.ச.285/3A நெ. காலையில் தென்வடலாகவும், கிழமேலாகவும் சகல ஆட்கள், கால்நடைகள், வண்டி, சகல வாகனங்கள் போகவர உண்டான தடபாத்தியமும் பின்னும் க.ச.282/1B நெ. காலையில் கிழமேலாகவும், தென்வடலாகவும் உள் பு.ஏ.0.07½ செண்டு வண்டித்தடத்தில் சகல ஆட்களும், கால்நடைகள், வண்டி, சகல வாகனங்கள் போகவர உண்டான தடபாத்தியங்களும் சகிதம். ஷை பு.ஏ.0.07½ செண்டில் அடி நிலம் பாத்தியம் கிடையாது.

இவ்வுத்தரவு 2021 ம் வருடம் அக்டோபர் மாதம் 25 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/–(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**<u>இறுதி உத்தரவு</u>**

அ.வ.எண்.398/2017

இல்

இ.ம.எண்.1/2019

நாள்: 25.10.2021

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

---